**திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டம் -2014**

திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய சீஎல்கே 3000 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் பிரிவின் 8 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவாகவுள்ளது. கந்தளாய், தம்பலகாமம், கின்னியா, திருகோணமலை பட்டணமும் சூழலும், மற்றும் குச்சவெளி வடக்குப் பகுதியிலுள்ள தற்போதைய 17,000 மட்டங்களிலிருந்து 61,500 வரையான வழங்கல் இணைப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,650.25 மில்லியனிற்கு சமமான யூரோ 29.63 மில்லியனானதுடன் அதில் பிரான்ஸின் பிரான்கைஸ் டி அபிவிருத்தி முகவர் மற்றும் ஒதுக்க கொடுப்பனவு வெளிநாட்டு தூதரகம் - பிரான்ஸ் சாசனம் என்பன முறையே ரூபா 1,500.75 மில்லியனிற்கு சமமான யூரோ 10.35 மில்லியன் மற்றும் ரூபா 1.650 மில்லியனிற்கு சமமான யூரோ 10 மில்லியன் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. எவ்வாறாயினும், மேலதிக கிரயம் காரணமாக, ரூபா 412.5 மில்லியனிற்கு சமமான யூரோ 2.5 மில்லியன் குறைநிரப்பு ஒதுக்கீடென்று ஒதுக்க கொடுப்பனவு வெளிநாட்டு தூதரகம் - பிரான்ஸ் சாசனத்தால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை 2006 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2010 நவம்பர் இறுதியளவில் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்ட காலப்பகுதி 2015 ஆகஸ்ட் 31 வரை மூன்று சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நீர் வழங்கல் சபையின் திருகாணமலை பிராந்திய சேவை நிலைய அலுவலகத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருந்த ரூபா 60.89 மில்லியன் பெறுமதியான நிர்மாணப் பொருட்கள் செயற்திட்டத்தால் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலையின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதே தொகையால் பெறவேண்டிய கணக்குகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம்செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவசர ஒதுக்ககொடுப்பனவுகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 70 மில்லியன் பெறுகைள் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 108.69 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. வித்தியாசம் ரூபா 38.69 மில்லியன் இணக்கம் செய்யப்பட்டு இத்படி கணக்ககளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ஒப்பந்த கொடுப்பனவுகள் மீதான ஒரு சதவீத நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய வரி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட ரூபா 25.3 மில்லியன் தொகையான மொத்த ஒப்பந்த கொடுப்பனவுகளில் கழிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அனுப்பப்ட்டிருக்கவில்லை.

### 2.2.5 முன்னைய கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

02 நீர் உற்பத்திகள் மற்றும் தண்ணீர் சுத்திகரிப்பு பொறிகளிற்காக மின்சாரம் வழங்கலில் இலங்கை மின்சார சபையில் இடப்பட்ட ரூபா 6.91 மில்லியன் பாதுகாப்பு வைப்புக்கள் முன்னைய ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீ செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான மற்றும் 2013 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மிலலியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏஎவ்டி | 10.35 | 1,500.75 | 40.00 | 0.23 | 39.75 | 10.20 | 1,637.07 |
| ஆர்பீஈ | 12.50 | 2,062.50 | 70.00 | 0.62 | 108.69 | 10.87 | 1,778.05 |
| இலங்கை அரசாங்கம் | 6.78 | 1,087.00 | 80.00 | 0.44 | 76.83 | 9.03 | 1,465.61 |
| மொத்தம் | 29.63 | 4,650.25 | 190.00 | 1.29 | 225.27 | 30.10 | 4,880.73 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பபட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், திருகோணமலை, கந்தளாய் மற்றும் வெள்ளை மணலில் நீர் உற்பத்திகளின் நிர்மாணம், நீரிறைக்கும் இல்லங்கள் மற்றும் நீர்தேக்கங்களின் புனரமைப்பு மற்றும் நீரிறைப்புகளின் குழாயிடல் போன்றன 2014 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அதில் மேற்குறிப்பிடப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட 03 ஒப்பந்தங்களின் கீழான வேலைகள் 12 மாதங்கள் தொடக்கம் 46 மாதங்கள் வரையான வீச்செல்லைகொண்ட தாமதங்களுடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. கின்னியாவில் குழாய்கள் பொருத்துதல் போன்ற ஏனைய வேலைகள் ஒப்பந்தகாரருக்கு நிர்மாண வேலைத்தளங்களின் கைளிப்பிலுள்ள தாமதங்களாணமாக எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியிலிருந்து 14 மாதங்களிற்கு மேலான தாமதங்களுடன் பின்னர் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூத்த்தியாக்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

நீர் உற்பத்தி நிர்மாண வேலைகள், நீரிறைக்கும் இல்லங்கள் மற்றும் நீர்த் தேக்கங்களின் புனரமைப்பு என்பவற்றின் பயன்பாட்டிற்காக கட்டுப்பாட்டு மீற்றர் மற்றும் 02 சேறு சுத்திகரிப்பு போன்ற உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2013 இல் செலுத்தப்பட்டிருந்த ரூபா 4.2 மில்லியன் தொகை மின்சார வழங்கல் இன்மை காரணமாக 2015 திசெம்பர் 31 வரை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

வழமையாக, செயற்திட்டத்தின் உத்தியோகத்தருக்கான வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொது நிர்வாக நோக்கத்திற்காக போதிய உத்தியோகத்தர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் ஈடுபடுத்தப்பட்ட போதும் அவற்றின் மீது மேந்தலையின் 20 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் ரூபா 2.56 மில்லியன் மேந்தலைக் கிரயத்தின் சாட்டுதல்களில் செலவழிக்க வேண்டியிருந்தது.